# அறிவிப்பு

## தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை 42

தமிழகத்திலுள்ள தனியார் பணிமனைகளுக்கு அரசு அங்கீகாரம் (பதிவு) வழங்க விண்ணப்பங்கள் வரவேற்பது தொடர்பாக.

1) தமிழ் நாடு அரசுத் துறைகளைச் சார்ந்த இயக்கூர்திகளுக்கு கீழ்காணும் பழுதுகள் பணிகள் மேற்கொள்ள தமிழ்நாட்டிலுள்ள தனியார் தானியங்கிப் பட்டறைகளுக்கு 01.04.2024 முதல் 31.03.2026 வரை இரண்டு ஆண்டுகளுக்கு கீழ்க்கண்ட பணிகள் ஒவ்வொன்றிற்கும் அரசு அங்கீகாரம் வழங்க தனித்தனி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2) இரண்டு சக்கர இயக்கூர்திகள் அனைத்து வகை பழுதுகள்

3) நான்கு சக்கர இயக்கூர்திகள்

   1) பெரும் பழுதுகள் (சிறு பழுதுகள் உடற்கூடு பழுதுகள் மின்பணிகள், அப்போல்சரி மற்றும் சர்வீசிங் பழுதுகள் பார்த்தல்)
   2) சிறு பழுதுகள்
   3) உடற்கூடு பழுதுகள் (ஒட்டு வேலை தகரப்பணிகள் மற்றும் வர்ணம் பூசுதல்)
   4) மின்பணிகள்
   5) அப்போல்சரி
   6) சர்வீசிங்

மேற்குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு வகை பழுதிற்கும் தனித் தனியாக விண்ணப்பம் அளிக்க வேண்டும். இதற்கான விண்ணப்ப படிவங்கள் மற்றும் நிபந்தனைகள் இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை 42 லிருந்து ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.500/- +GST 18% (90/-) ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) ரொக்கமாக செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம் அல்லது அஞ்சல் மூலம் ரூ. 640/- (ரூபாய் அறுநூற்று நாற்பது மட்டும்) செலுத்தி 01.12.2023 காலை 10 மணி முதல் 29.12.2023 பிற்பகல் 2.00 மணி வரை அனைத்து வேலை நாட்களிலும் பெற்றுக் கொள்ளலாம். நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள 29.12.2023 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**ஒம்/...கொ.செந்தில்வேல்,**
**இயக்குநர்.**

நகல் -

1. துணை இயக்குநர் ,இயக்குநரகம், சென்னை 42.
2. உதவி கணக்கு அலுவலர், இயக்குநரகம், சென்னை 42
3. ஈ1 இருக்கை இளநிலை உதவியாளர், இயக்குநரகம், சென்னை 42.
4. தபால் எழுத்தர், இயக்குநரகம், சென்னை 42
5. ஈ பிரிவு கண்காணிப்பாளர்
6. அறிவிப்பு பலகை
7. அனைத்து சார்நிலை அவலுவலர்கள்

// ஆணைப்படி //

பொருள் மேலாளர். 16/11

16/11/23

Scanned with OKEN Scanner